

# 31-05-2024 செய்தி

## மாறுகிறது தெலுங்கானா அரசு முத்திரை

- இதற்கான, பணி ஓவியர் ருத்ரா ராஜேஷ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- தற்போது தெலுங்கானா மாநில அரசின் முத்திரையில், வாராங்கல் மாவட்டத்தில் உள்ள காக்கத்தியர்கள் நுழைவுவாயிலும், ஹைதராபாதில் உள்ள சார்மினாரும் இடம் பெற்றுள்ளன.
- அதோடு, பிரபல தெலுங்கு கவிஞர் அண்டே ஸ்ரீ எழுதிய, ஜெய ஜெய ஹே தெலுங்கானா என்ற பாடலை மாநில கீதமாக அறிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ஆஸ்கர் விருது வென்ற இசையமைப்பாளர் கீரவாணி, மாநில கீதத்துக்கான மெட்டை அமைத்துள்ளார்.
- ஹைதராபாதின் முசி ஆற்றங்கரையில் உள்ள சார்மினார், 1591ல் முகம்மது குலி குப் ஷா என்ற மன்னரால் கட்டப்பட்டது.

## எகிப்து – காஸா எல்லை

- எகிப்துடனான காஸாவின் எல்லைப் பகுதி முழுவதையும் இஸ்ரேல் ராணுவம் கைப்பற்றியள்ளது.
- எகிப்துக்கும் காஸாவுக்கும் இடையிலான ஃபிலாடெல்ஃபி வழித்தடம் தற்போது ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

**ராஃபாவில் தீவிரமடையும் சண்டை:**

- எகிப்தையொட்டிய காஸா நகராமான ராஃபாவில் இஸ்ரேல் படையினருக்கும் பாலஸ்தீன ஆயுதக் குழுக்களுக்கும் இடையிலான மோதல் மேலும் தீவிரமடைந்தது.
- காஸாவிலிருந்து இஸ்ரேலுக்குள் 2023 அக். 7-ஆம் தேதி நுழைந்த ஹமாஸ் அமைப்பினர்.
- அங்கு சுமார் 1200 பேரை படுகொலை செய்தனர். மேலும் சுமார் 240 பேரை அங்கிருந்து பிணைக் கைதிகளாக கடத்திச் சென்றனர்.
- அதையடுத்து ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக்கட்டுவதாகவும் பிணைக் கைதிகளை மீட்பதாகவும் சூளுரைத்த இஸ்ரேல் ராணுவம், காஸாவில் மிகக் கடுமையான தாக்குதல் நடத்திவருகிறது.
- இதில் இதுவரை 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

## மாதா அகில்யா பாய் 300-வது பிறந்தநாள்

**சிறந்த சமூக சீர்திருத்தவாதி**

- பெண்களுக்கான கல்வி, கணவனை இழந்த பெண்களுக்கு கணவனின் சொத்துரிமை, மறுமணம் செய்வதற்கான வாய்ப்பு, குழந்தைத் திருமணங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் போன்ற சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதில் முக்கியப் பங்காற்றினார்.

**தொலைநோக்கு பார்வை:**

- மகேஸ்வரம் நகர் புனரமைப்பு, அவரது தொலைநோக்கு பார்வைக்கான ஒரு எடுத்துக்காட்டு, இன்றும் மகேஸ்வரம் புடவைகளுக்கு நல்ல பெயரைப் பெற்ற நகரமாகும்.
- பில்ஸ் மற்றும் கோண்ட்ஸ் போன்ற பழங்குடியினருக்கு நிலங்களைக் கொடுத்து எப்போதும் அவர்களின் நலனில் அக்கறை கொண்டிருந்தார்.
- பழங்குடிப் பெண்கள் புடவை நெய்ய ஊக்குவிக்கப்பட்டு, பழங்குடிப் பெண்களின் பொருளாதார சுய வேலை வாய்ப்புக்கு புதிய பாதைகளை வகுத்தார்.

**இன்று தொடக்கம்**

- மே 31, 2004 முதல், ஒரு வருடத்திற்கு அவரது 300-வது பிறந்த நாளை நாடு முழுவதும் கொண்டாடுவோம்.

## பொருளாதார வளர்ச்சி 7 சதவீதம் ரிசர்வ் வங்கி அறிக்கையில் கணிப்பு

**சாதகமான அம்சங்கள்**

- வலுவான உள் நாட்டு பொருளாதார அடிப்படைகள்
- அரசின் மூலதன செலவினம்
- நிதி ஒருங்கிணைப்பு
- வங்கிகள், நிறுவனங்களின் சிறப்பான இருப்புநிலைகள்

**பாதகமான அம்சங்கள்**

- புவிசார் அரசியல் பதட்டங்கள்
- கச்சா எண்ணெய், தங்கம், வெள்ளி விலை ஏற்ற, இறக்கங்கள்
- சீரற்ற வானிலை மாற்றங்கள்

**அறிக்கை**

- நாட்டின் பொருளாதார அடிப்படைகள் வலுவாக இருப்பதால், நடப்பு நிதியாண்டில், வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த பணவீக்கம் மேலும் குறையக் கூடும், எனினும், விநியோக தொடரில் அவ்வப்போது ஏற்படும் சிக்கல்கள் காரணமாக, உணவு பணவீக்கம் பாதிக்கப்படக் கூடிய நிலையிலேயே உள்ளது.
- பொருட்களின் விலையில் நிலைத்தன்மையை ஏற்படுத்தி, பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வருவதில், ரிசர்வ் வங்கி உறுதியாக உள்ளது.
- அதிகரித்து வரும் செயற்கை நுண்ணறிவு மற்றும் மிஷின் லேர்னிங் தொழில்நுட்ப பயன்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள, நாடு தயாராக இருக்க வேண்டும்.

**பாகிஸ்தான், வங்கதேசம் ஜி.டி.பி., யை விட அதிகம்**

- நிதியாண்டுக்கான ரிசர்வ் வங்கியின் இருப்புநிலை 11.08 சதவீதம் அதிகரித்து, 70.48 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- இது, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்தின் ஒட்டுமொத்த பொருளாதார மதிப்பைக் காட்டிலும் அதிகமாகும்.

**ரூ. 500 நோட்டுகளின் புழக்கம் அதிகரிப்பு**

- 2,000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெற துவங்கியதை அடுத்து, நாட்டில் புழக்கத்திலுள்ள ரூபாய் நோட்டுகளில், 500 ரூபாய் நோட்டுகளின் பங்கு 77.10 சதவீத்திலிருந்து 86.50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**ரூ. 27,000 கோடிக்கு தங்க பத்திர முதலீடு**

- நிதியாண்டில், முதலீட்டாளர்கள் ஒட்டுமொத்தமாக 27,031 கோடி ரூபாய்க்கு தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளதாக, ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

SURESH'